வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

தரம் - 5

பயிற்சி வினாத்தாள் – 06

- தயாரிப்பு : திரு.ந.திருவாசகன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.சோ.திருக்குமரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி)

6

வினாத்தாள் - 1

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 05 புலமை - 2023

தமிழ்

திங்கள் காலை 5 மணி
வியாழன் மாலை 7 மணி

சுற்றாடல்

செவ்வாய் மாலை 7 மணி
வெள்ளி காலை 5 மணி

நுண்ணறிவு

செவ்வாய் வியாழன்
காலை 5 மணி

கட்டணம் - 700/=

கணிதம்

புதன் காலை 5 மணி
புதன் மாலை 7 மணி

சிங்களம் ஆங்கிலம்

சனி காலை 5 மணி

பரீட்சை

சனி மாலை 7 மணி

பரீட்சை அலசல்

ஞாயிறு மாலை 7 மணி

வினாத்தாள் வகுப்பு


ஞாயிறு காலை 5 மணி

zoom


மாத கட்டணம் 2000/=

76667-4945


01.பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)□



(2)



(3)

02.ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப்பொருத்தமான இரண்டு பொருட்கள் எவை?



A




B



C



D



E

(1)A உம் C உம் (2) Bஉம்D உம் (3) A உம் Eஉம்

03.பாமினா பணக்கார வீட்டுப் பிள்ளை. எப்போதும் மேலதிக வாசிப்புப் புத்தகங்களைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை நண்பர்களுக்கு பெருமையாகக் காட்டுவாள். ஆனால் யாருக்கும் வாசிக்கக் கொடுக்கமாட்டாள். பாமினாவைக் குறிப்பிட மிகப் பொருத்தமான சொல்?

(1)சுயநலவாதி (2)பிடிவாதக்காரி (3)பொதுநலவாதி

04.கமல் தரம் 5இல் கற்கும் கெட்டிக்கார மாணவன். கடந்த இரண்டு வாரங்கள் அவன் பாடசாலைக்கு வரவில்லை. கமல் பாடசாலைக்கு வராமைக்கு காரணம் எதுவாக இருக்கும்.

(1)அவன் சுகவீனமுற்று இருந்தமை.
(2)வகுப்பு வேலைகள் கடினமாகக் காணப்பட்டமை.
(3)அவனிடம் பணம் இல்லை.

05.கீழே தரப்பட்ட வாக்கியங்களில் எழுத்துப் பிழைகள் இல்லாத வாக்கியத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(1)மரத்தில் இருந்து குயில் பரந்தது
(2)சாமினி அளகிற் சிறந்தவள்
(3)நரி ஊளையிடும்.

06.ஈருருளியில் இருவர் பயணம் செய்தனர். ஒருவர் மற்றவரின் தாய் ஆவார். ஆனால், மற்றவர் தாயின் மகன் அல்ல எனின், மற்றவர் அவருக்கு என்ன உறவு?

(1)அம்மா (2) மகள் (3) தந்தை

www.ikeou.lk

07. சமபக்க முக்கோண வடிவம் கொண்ட பூங்காவொன்றின் ஒரு பக்க நீளம் 12 மீற்றர் ஆகும். அதனை சுற்றிவர 3 மீற்றர் இடைவெளியில் தூண்கள் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்ட தூண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 36 (3) 15

08. 200இன் அரைவாசியுடன் 20ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

(1) 120 (2) 100 (3) 80

09.TBTK என்ற இரகசியக் குறியீடு குறிக்கும் சொல்

(1)பருவம் (2) வடிவம் (3)தங்கம்

10.

ந க வ உ க வ 9 த ப ம க வ இ க வ ம வ க

இங்கு க எழுத்துக்கு பின்னர் வ எழுத்து இடம்பெற்றுள்ள தடவைகள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 4

11.“அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” எனும் பழமொழியின் கருத்தைத் தரும் பழமொழி எது?

(1)முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
(2)ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
(3)ஆனைக்கும் அடி சறுக்கும்.

12.பின்வரும் உரு பற்றிய சரியான கூற்று யாது?



(1)இங்கு உணவு தயாரிக்க வசதிகள் உண்டு.
(2)நோயாளர்களைப் பராமரிக்கும் இடமாகும்.
(3)கல்வி கற்பதற்கு ஏற்ற இடமாகும்.

www.lkedu.lk

13.பங்குனி மாதம் 18ஆம் திகதி ஆரம்பித்த வேலையொன்று 10 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது எனின், வேலை முடிவடைந்த திகதி யாது?
(1) பங்குனி 28ஆம் திகதி (2) பங்குனி 27ஆம் திகதி (3)பங்குனி 29ஆம் திகதி

14.அனுலாவினதும் குமரனினதும் மொத்த நிறை 75kg ஆகும். மாலாவினதும் அனுலாவினதும் மொத்த நிறை 65kg ஆகும். குமரனினதும் மாலாவினதும் மொத்த நிறை 60kg ஆகும். அனுலா, குமரன், மாலா ஆகிய மூவரினதும் மொத்த நிறை யாது?
(1)200kg (2) 100 kg (3) 140 kg

15.பண்ணை ஒன்றில் உள்ள ஆடுகளினதும் கோழிகளினதும் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 48 எனின், அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை யாது?
(1) 10 (2) 09 (3)06

16.வியாபாரி ஒருவர் இலக்கங்களுக்குப் பதிலாக ஆங்கில எழுத்தைப் பாவித்து MHFR.MC என விலை குறித்துள்ளார். கீழே ஆங்கில எழுத்துக்களினால் குறிக்கப்பட்டுள்ள விலைகளைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.
(1) 5436.59 (2) 8273.87 (3) 6426.60

17.பாலன் 2kg மாவினை வாங்கி அதில் 800g பயன்படுத்திய பின்னர் மீதி மாவில் 2/3 பங்கை பொதி செய்தான். அவன் பொதி செய்த மாவின் அளவு யாது?
(1) 1200g (2) 800g (3) 400g

18.தொழிற்சாலை ஒன்றில் 45 நிமிடங்களுக்கு ஒரு தடவை மணி எழுப்பப்படும். குறித்த ஒரு நாளில் மு.ப 9.15 மணிக்கு நான்காவது தடவையாக மணி எழுப்பப்பட்டது. அவ்வாறாயின் முதலாவது மணி எழுப்பபட்ட நேரம் யாது?
(1) மு.ப 7.00 (2) மு.ப 7.45 (3). பி.ப 7.00

19.நாளை மறுதினம் 19ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். நேற்று முன்தினத்திற்கு முதல்நாள் என்ன கிழமை?
(1) சனிக்கிழமை (2)ஞாயிற்றுக்கிழமை (3) வியாழக்கிழமை

20.யூன் மாதத்தின் முதலாம் நாள் திங்கட்கிழமை எனின், அம்மாதத்தில் வரக்கூடியது
(1) புதன் கிழமைகளின் எண்ணிக்கை ஐந்தாக இருக்கும்.
(2) அம்மாதத்தின் 21ஆம் , 28 ஆம் திகதிகள் வெள்ளிக்கிழமையாக இருக்கும்.
(3) அம்மாதத்தின் கடைசிநாள் செவ்வாய்க்கிழமையாக இருக்கும்.

21.நான் காலையில் பாடசாலை செல்கையில் எனது நிழல் இடது கைப்பக்கமாகக் காணப்பட்டது. அதனடிப்படையில் நான் பாடசாலை சென்ற திசைக்கு எதிர்த்திசை யாது?
(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

www.keou.lk

22.இருபத்துநான்கு கோப்பைகள் தேநீர் தயாரிப்பதற்கு 1kg சீனி தேவையாகும். 60 கோப்பைகள் தேநீர் தயாரிப்பதற்கு எவ்வளவு சீனி தேவை?

(1) 3.5kg (2) 2kg 500g (3) 2kg 400 g

23.ஒரு மோட்டார் வாகனமானது 1 லீற்றர் எரிபொருளில் 14km தூரம் பயணிக்கும் . அவ் மோட்டார் வாகன எரிபொருள் தொட்டியில் பயண ஆரம்பத்தின் போது 3லீற்றர் 500மில்லிலீற்றர் எரிபொருள் அடங்கியிருந்தது. பயண முடிவில் 1லீற்றர் எரிபொருள் மீதியாக இருந்தது எனின் அவ் மோட்டார் வாகனம் பயணம் செய்த தூரம் யாது?

(1) 55km 2) 35 km 3) 45km

24.காமினியின் தற்போதைய வயது 12 ஆகும். அவனுடைய தாயின் தற்போதைய வயது காமினியின் வயதின் நான்கு மடங்கிலும் பார்க்க இரண்டு கூடியதாகும். இன்னும் நான்கு வருடங்களில் இருவரதும் வயதுகளின் கூட்டுத் தொகை யாது?

(1) 62 (2) 70 (3) 68

25.நிலக்சியின் அக்கா சானுலா ஆவாள். அவளுக்கு மூன்று சகோதரர்களும் , ஒரு சகோதரியும் உள்ளனர். நிலக்சியின் ஒரு சகோதரனுக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் , சகோதரிகளின் எண்ணிக்கையும் முறையே குறிப்பிடுவது?

(1) சகோதரர்கள் 2, சகோதரி – 1
(2) சகோதரர்கள் 1, சகோதரி – 2
(3) சகோதரர்கள் 2, சகோதரி – 2

26.குறித்த எண்ணொன்றை 6 ஆல் பெருக்கி , 13ஐக் கூட்டி வரும் விடையுடன் 11 ஐக் கழித்தால் வரும் விடை 56 எனின், அவவெண் யாது?

(1) 9 (2) 7 (3) 8

27.தோடம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 240. 00 ஆகும். என்னிடம் ரூபாய் 130.00 உள்ளது. நான் மீதிப்பணத்தை அண்ணாவிடம் இருந்தும் , அக்காவிடம் இருந்தும் பெற்றுக் கொண்டேன். அண்ணாவிடம் இருந்தும் அக்காவிடம் இருந்தும் நான் பெற்றுக் கொண்ட பணத்தை ஒழுங்கு முறையாக எழுதினால் கிடைப்பது.

(1) ரூபாய் 140.00 , ரூபாய் 100.00
(2) ரூபாய் 60.00 , ரூபாய் 50.00
(3) ரூபாய் 50.00 , ரூபாய் 70.00

28.என்னிடம் ஒரே அளவு நீளத்திலான ஈர்க்குத் துண்டுகள் சில இருந்தன. அவற்றினால் நான் சதுரங்கள் இரண்டினையும் , நான்முகி மூன்றினையும் அமைத்த பின் என்னிடம் 4 ஈர்க்குத் துண்டுகள் மீதமாக இருந்தன. ஆரம்பத்தில் இருந்த ஈர்க்குத்தண்டகளைக் கொண்டு மூன்று சதுரமுகி அமைக்க இன்னும் எத்தனை ஈர்க்குத் துண்டுகள் தேவை?

1) 6 2) 8 3) 9

www.lkedu.lk

29.கமல் , நிமல் , அமல் ஆகியோர் ஒரு பண்ணையாளரிடம் சென்று அவர் வளர்க்கும் பிராணிகளின் எண்ணிக்கையைக் கேட்டனர். அதற்குப் பண்ணையாளர் பின்வருமாறு கூறினார். 16 ஐத் தவிர ஏனையவை மாடுகள் 8 ஐத் தவிர ஏனையவை கோழிகள் 12 ஐத் தவிர ஏனையவை ஆடுகள் என்றார். ஆகவே பண்ணையாளர் வளர்க்கும் பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1)□ 15 (2) 20 (3) 18

30. 21ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தத்தைக் குறிக்கும் ஆண்டு எது?

(1) 2147 (2) 2040 (3) 2049


31. 23மீற்றர் ஆழமுள்ள ஒரு குழியில் விழுந்த பூனையொன்று குழியிலிருந்து மேலே வர முயற்சி செய்தது. பூனை 3m ஏறும் போது, 1m சறுக்கி விழும். இப்பூனை எத்தனையாவது தடவையில் தாவி ஏறி குழியிலிருந்து வெளியே வரும்?


(1) 11 (2) 10 (3) 9


32.ஒரு நீர்த்தாங்கி 122 லீற்றர் நீரைக் கொள்ளும் எனினும் அதில் பொருத்தப்பட்டுள்ள குழாய் ஒன்று 1 நிமிடத்தில் 4 லீற்றர் நீரை நிரப்பும் போது தாங்கியில் உள்ள துளையின் மூலம் நிமிடத்திற்கு 2 லீற்றர் நீர் வெளியே செல்கிறது. எனின் தாங்கியினை முழுவதுமாக நிரப்புவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?

1) 40 நிமிடம்
2) 1 மணித்தியாலம்
3) 2 மணித்தியாலம்

33.தரப்பட்ட உருக்களில் அரைவாசிக்கு அதிகமாக நிறந்தீட்டப்பட்ட உரு எது?


(1)


(2)


(3)

34. பின்வரும் பாடலில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்கள் அடங்கிய பகுதி எது?

மழை மழை இனியது மழை
..... தருவது மழை
மலர்களை நனைப்பது மழை
மண் ..... தருவது மழை.

(1)மண்ணைத் வாசனை (2)மகிழ்ச்சி வாசனை (3)தண்ணீர் பரப்பிலும்

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 5

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	புதன் வெள்ளி – மாலை	6.15 – 7.15
ஆங்கிலம்	செவ்வாய் – மாலை	7.00 – 8.00
தமிழ்	சனி ஞாயிறு – மாலை	7.15 – 8.15
கணிதம்	சனி ஞாயிறு – காலை	6.00 – 7.00
சிங்களம்	வியாழன் – மாலை	7.10– 8.00
SPOKEN ENGLISH	சனி – காலை	9.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – மாலை 6.15–7.10

நுண்ணறிவு (பிரிவு–2) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

தரம்

வினாத்தாள் வகுப்பு

04
கட்டணம்
600/=


திங்கள் புதன்
இரவு - 7.00

05
கட்டணம்
800/=

திங்கள் புதன் வெள்ளி
இரவு - 7.15

பரீட்சை – செவ்வாய் மாலை – 6.00

35.உருவில் காணத்தக்க செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?



(1) 9 (2) 6 (3) 13

36. கோலத்திற்குகேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண் யாது?




(1) □90 (2) 88 (3) 85

37.வரிசையொன்றில் P இற்கு முன்னால் இரண்டு பேரும் P இற்குப் பின்னால் எட்டுப்பேரும் நின்றனர். வரிசையின் பின்னாலிருந்து மூன்றாவது ஆளாக Q நின்றார். எனின், P இற்கும் Q இற்கும் இடையே எத்தனை பேர் நின்றனர்?

(1) 4 (2) 5 (3) 6

38. உருவில் காட்டபப்ட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது. அதற்கேற்ப  இற்குச் சமனானது?



(1)  (2)  (3) 


www.ikedu.lk

39.சந்தை ஒன்றில் 4 அன்னாசிப்பழங்கள் வாங்கினால் 1 தோடம்பழம் இலவசமாக வழங்கப்படுமென வியாபாரி கூறினார். 44 அன்னாசிப்பழங்கள் வாங்கும் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய பழங்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?


(1) 55 (2) 15 (3) 11

40. அனித் A என்ற இடத்திலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று பின் தெற்கு நோக்கி சென்று பின், மீண்டும் கிழக்கு நோக்கிச் சென்று அதன் பின் தெற்கு நோக்கிச் சென்று பின்னர் மேற்கு நோக்கிச் சென்று B என்ற இடத்தை அடைந்தான் எனின் அவன் சென்ற பயணப் பாதையைக் காட்டும் உரு எது?


(1)



(2)



(3)



www.lkedu.lk

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

தரம் - 5

பயிற்சி வினாத்தாள் – 06

- தயாரிப்பு : திரு.ந.திருவாசகன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.சோ.திருக்குமரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி)

6

வினாத்தாள் - 2

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- **உமது சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில் உள்ள** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.ikedu.lk

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

நாங்கள் அனைவரும் இரவு நேரம் நிலவின் ஒளியில் குதூகலித்துக் கொண்டிருந்தோம். அவ்வேளையில் வானத்தில் வெளவால் கூட்டம் பறந்து சென்றது. அவற்றைப் பார்ப்பதற்கு வியப்பாக இருந்தது. வானத்தில் விண்மீன்கள் தகதகவென மின்னின. தவளைகள் கத்தும் சத்தம் காதைத் துளைத்தது. இரவில் பூத்த மலர்கள் கமகமவென நறுமணம் வீசின.

❖ பந்தியைத் துணையாகக் கொண்டு விடை தருக.

(01) இரவு நேரத்தில் ஒளியை வழங்கியது எது?

……..…

(02) நட்சத்திரங்கள் என்பதை குறிக்கும் சொல் எது?

……

(03) இரட்டைக்கிளவி சொல் ஒன்று எழுதுக?

……

(04) தன்மைப் பன்மை பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக?

……

(05) "வானத்தில் வெளவால் கூட்டம் பறந்து சென்றது" எனும் வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

……

(06) சினைப்பெயர் ஒன்று தருக.

……..

02.உயர்திணை இறந்தகால பன்மை வினைச்சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக .
(ஓடினான், சென்றார்கள், உண்டது)

03.தரப்பட்டுளள் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.
(1)பயணிகள் / பெறாவிட்டால் / அறவிடப்படும் / பேருந்தில் / பயணச்சீட்டைப் / தண்டப்பணம் / பயணிக்கும்

……
…… .

2.தலையணைக்கு/ அருகில் /நித்திரை/வேண்டாம் /கொள்ளும்போது/கைப்பேசியைத் / வைக்க

……
…… .

04.பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

(1) நான் அவனுக்கருகில் செல்லும்போது சத்தம் போடாமல் அமைதியாக இரு எனச் சிங்கம் கட்டளை இட்டது
(2) சிங்கராசாவே என்னை அழைத்தீர்களா

www.lkedu.lk

05.பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக

(1)நோயற்ற …… குறைவற்ற …… .

(2) …… கொடியும் …….. மிடுக்கு.

06.இடைவெளிக்குப் பொருத்தமான சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

(1).அப்பா சந்தையில் ……..…… வாங்கினார்.
(விலாம்பழம், விழாம்பழம், விளாம்பழம்)

(2).நான் …….. குடித்தேன்.
(செவ்விளனி, செவ்விளநீர் ,செவ்விளனீர்)

07. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(1) பசுவின் …….. நீளமானது (வாள் , வால் , வாழ்)

(2)பூக்கள் நறு ……. வீசும். (மனம் , மநம் , மணம்)

08. சரியான விடையினை எழுதுக.

(1).தன்னைப் பற்றித் தானே எழுதும் சரிதை :-

……..

(2).தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் : - ……

09. கீழே தரப்பட்டுள்ள இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

(1) கண்ணும் ……

(2) அல்லும் ……

10. புலி குட்டி என்பது போல யானை …….

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(01) Garden :- ……

(02) Pine apple :- ……

12. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

(1) 

 (2)

…… ……

www.lkedu.lk

13.கீழே தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்குப்படுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(01) my / This / mother / is

……..……

(02) has / brothers / She / two

…….

14. பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான சிங்களக் கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
1).அதிபர் - …… 2). நண்பி -……

15. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.
(1)புஸ்தகாலய :- ……..
(2) நந்தா :- …….

16) "ஆறாயிரத்து எண்பது" இவ் எண்ணை இலக்கத்தில் எழுதுக.
…… 2.

17)

6	5
3	0

1)இக்கட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி மிகச் சிறிய எண்ணை சொற்களில் எழுதுக.
……..

. 2)அவ்வெண்ணின் பத்தாமிடத்தின் பெறுமானம் யாது? ……

18) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.
1) 2 , 6 , 18, 54 ,162 , …….. 2) 5 , 10, 20, 40, 80, …….

19.ஒரு மாம்பழத்தினதும் ஒரு தோடம்பழத்தினதும் விலை ரூபாய் 360.00 ஆகும். தோடம்பழம் மாம்பழத்திலும் ரூபாய் 80.00 கூடியது எனின் மாம்பழத்தின் விலை யாது.?

……

20.ஒரு தோட்டத்தில் இருந்து ஆனி மாதத்தில் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 2479 ஆகும். ஆடி மாதத்தில் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 5637ஆகும். ஆனி மாதத்தை விட ஆடி மாதத்தில் எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன.

…….

21.ஒரு குழுவில் மூவர் வீதம் 18 குழுக்களில் உள்ள மாணவர்கள் தொகை யாது?

……

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

தரம் 3,4,5 நுண்ணறிவு - 2023

தரம் 03

சனி ஞாயிறு
காலை 7.00

Grade - 3 (500/=)
Grade - 4 (600/=)
Grade - 5 (700/=)

தரம் 04

பிரிவு - 01

சனி ஞாயிறு - இரவு 7.15

பிரிவு - 02

செவ்வாய் வியாழன் - இரவு 8.00

தரம் 05

பிரிவு - 01 சனி ஞாயிறு - இரவு 6.15

பிரிவு - 02 சனி ஞாயிறு - காலை 7.00

பிரிவு - 03 செவ்வாய் வியாழன் -
காலை 5.00

பரீட்சை - செவ்வாய் - மாலை 6.00

76667-4945

zoom

22.



உருவில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோம எண் குறியில் எழுதுக.

……

23. மூன்று மீற்றர் நீளம் கொண்ட துணியொன்றை 90 சென்ரிமீற்றர் மற்றும் 65 சென்ரிமீற்றர் அளவிலான இரண்டு துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால் எஞ்சும் துணியின் நீளம் யாது?

……..…….


24. 3 லீற்றர் 50 மில்லிலீற்றரை ஐ ml இல் தருக.

…….

25. ரூபாய் 950 ஐ பணமாகக் கொடுத்து 6 புத்தகங்களை வாங்கிய ஒருவருக்கு மீதியாக ரூபாய் 50.00 வழங்கப்பட்டது எனின் புத்தகமொன்றின் விலை யாது?

……..

26.



(1) உருவின் ¼ பங்கிற்கு நிறந்தீட்டுக.

(2)நிறந்தீட்டப்படாத பகுதியை பின்னத்தில் தருக.

……

27. இருபத்துநான்கு மாம்பழங்களில் ¾ பங்கு பழங்கள் எத்தனை?

…….

28. 95 இலிருந்து 46 ஐக் கழித்து 18 ஐக் கூட்ட வரும் எண் யாது?.

…….

29. 36 x 7 இன் பெறுமானம் யாது?

---

www.lkedu.lk

❖ இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. இரு புலன்களை ஒரே நேரத்தில் பயன்படுத்தும் சாதனம்.
1). ஒலிபெருக்கி 2). தொலைக்காட்சி 3). வானொலி

31. கம்மாலையில் நெருப்பு எரியக் காற்றை வழங்கும் உபகரணம் எது?
1). ஊதுகுழல் 2). சுளகு 3). துருத்தி

32.எமக்கு கிடைக்கும் இலவச சேவைகள் இரண்டு,
1). கல்வி, சுகாதாரம் 2). கல்வி ,மின்சாரம் 3). கல்வி , போக்குவரத்து

33. இரையைக் கண்டறிவதற்கு மீசையைப் பயன்படுத்தும் பிராணி எது?
1). முயல் 2). பூனை 3). குளவி

34. தனிப்பட்ட ஒருவரின் பாவனைக்கென மாத்திரம் கருதப்படாதது.
1) தும்புத்தடி 2) பற்றூரிகை 3) சீப்பு

35. மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிப்பதற்கு செய்ய வேண்டியது,
1) மின்விசிறியை எந்நேரமும் பயன்படுத்தல்,
2) வீட்டில் உள்ளோர் தனித்தனியாக உடைகளை மின்னழுத்தியால் அழுத்துதல்.
3) அவசியப்படாத சந்தர்ப்பங்களில் மின்குமிழ்களை அணைத்து விடுதல்,

36. எவ்விலங்கின் கழிவுகள் பயிர்களுக்கு பசளையாக பயன்படுகிறது?
1) குரங்கு 2) மாடு 3) நாய்

37.அயடின் கலக்கப்பட்ட உப்பைப் பயன்படுத்துவதன் மூலம் தடுக்கப்படக்கூடிய நோய்,
1) மஞ்சள் காமாலை 2) தொண்டைக் கழலை 3) வயிற்றுப்போக்கு

38. நூலகத்தில் அவதானிக்கக் கூடிய மனிதர்களின் சரியான நடத்தை பின்வருவனவற்றுள் எது?
1) புத்தகங்களை ஒழுங்கின்றி வைத்தல்.
2) புத்தகங்களைக் கிழித்தல்.
3) அமைதியாக இருத்தல்.

39. நாம் வெளிக்காட்டும் நடத்தைகளுள் ஆக்கிரமிப்பு நடத்தையைக் காட்டுபவரிடம் எவ்வாறான நடத்தையைக் காட்ட வேண்டும்?
1) நடுநிலை நடத்தை 2) தாழ்வு நடத்தை 3) ஆக்கிரமிப்பு நடத்தை

40. வேடுவர்களின் நடனம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) கிரிகொரங்க 2) கண்டிய நடனம் 3) பரத நாட்டியம்

41. நோன்புப் பெருநாள் கொண்டாடும் இனத்தவர் யார்?
1) சிங்களவர் 2) தமிழர் 3) முஸ்லீம்கள்

42.நடுகைக்கு உகந்த வித்துக்களின் பண்புகளில் அடங்காதது எது?
1)வித்துக்களில் காயம் இல்லாதிருத்தல்.
2)நன்கு முதிர்ச்சி அடைந்திருத்தல்.
3)பிராணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டிருத்தல்.

www.ikeduu.lk

43.படத்தில் காணப்படுபவர் பற்றிக் கூறக்கூடியது.



1.இலங்கையின் முதலாவது ஜனாதிபதி
2.இலங்கையின் முதலாவது பிரதமர்
3.இலவசக் கல்வியின் தந்தை

44. 

இக்குறியீடு மூலம் வழங்கப்படும் தகவல் என்ன?
1) சிற்றுண்டிச்சாலை
2) குடிநீர்
3) தீ பற்ற வைப்பது தடை

45. தொடர்பாடலின் மூன்று கூறுகளையும் முறையே குறிப்பிடுவது?
1) பெறுபவர்-ஊடகம்-அனுப்புபவர்
2) அனுப்புபவர்- ஊடகம் - பெறுநர்
3) ஊடகம் - பெறுநர்- அனுப்புபவர்

46. படத்தில் காட்டப்பட்ட மாகாணம் பற்றிய சரியான கூற்றாக அமையாதது?



1)இலங்கையில் அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்.
2)இலங்கையின் சனத்தொகை கூடிய மாகாணம்.
3)கடலுடன் தொடர்புடைய மாகாணம்.

47.உணவுக்காகப் பயன்படும் வித்துக்களைக் கொண்ட தொகுதி எது?
1) கோதுமை, பாசிப்பயறு 2) பலா, கத்தரி 3) வெண்டி , கத்தரி

48. இடியப்ப உரல் செய்யப் பயன்படும் தாவரம் எது?
1) பூவரசு 2) பனை 3) மா

49.மனிதனின் பின்வரும் எந்தச் செயற்பாடு பிராணிகளின் குடித்தொகைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்?
1) காடு வளர்ப்பு 2) இரசாயனப் பீடைநாசினிப் பாவனை 3) இயற்கை விவசாயம்

50. 'கொத்தன்' என அழைக்கப்படும் தொழிலாளி யார்?
1)மேசன் 2) விவசாயி 3) தச்சன்

51.விற்றமின் *D* அதிகம் அடங்கியுள்ள உணவு?
1) மீணெண்ணெய் 2) உழுந்து 3) பயறு

52. உயரமான இடங்களிலும் மாடி மனைகளிலும் வசிப்போர் மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற பொருத்த வேண்டிய உபகரணம்.
1) அன்ரென்னா 2) புவித் தொடுப்பு ஆளி 3) மின்னற்கடத்தி

53.சிவப்பு நிறமும், மஞ்சள் நிறமும் சேரும் போது தோன்றும் நிறம் எது?
1) செம்மஞ்சள் 2) பச்சை 3)ஊதா

www.lkedu.lk

54. வகுப்பறையில் நேரசூசியின் படி வேலைகளைச் செய்வதால் ஏற்படும் நன்மை எது?
1) வேலை தாமதமாகும் 2) செலவு குறையும் 3) நேரம் மீதப்படும்

55. நத்தை பயிர்களின் எப் பகுதிகளைச் சேதமாக்குகின்றது?
1) இலை 2) அரும்புப்பகுதி 3) தண்டுப்பகுதி

56.கடவுச் சீட்டினை வழங்கும் திணைக்களம் எது?
1) குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம்.
2) அரசாங்கத் திணைகக்ளம்.
3) போக்குவரத்து திணைகக்ளம்.

57.எமது அடிப்படை அல்லாத தேவைகள் எவை?
1) வளி, உணவு 2) வீடு, உடை 3) தொலைபேசி, வானொலி

58.வகுப்புத் தலைவனிடம் காணக்கூடாத இயல்பு எது?
1) தலைமைத்துவம் 2) நேர முகாமைத்துவம் 3) அகங்காரம்

59.இரசாயனப் பசளையாக அமைவது.
1) கூட்டெரு 2) யூரியா 3) இலைச்சருகு

60. "உமது வீட்டில் காலை உணவு தயாரிக்க தாமதமானதால் கடையில் உணவு வாங்குவதற்காக சிறுதொகைப் பணத்தை தாயார் தருகின்றார். வழியில் கண்ணைக்கவரும் நிறங்களில் இனிப்புக்கள் விற்கப்படுவதைக் காண்கிறீர்கள். உங்கள் நண்பர்களில் சிலர் அவற்றை வாங்கி உண்கிறார்கள். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்..." என்பதை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1.……..……

……..……

2.……..……

……..…

3……

……

www.ikedu.lk

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்
தரம் - 5
பயிற்சி வினாத்தாள் – 06

தயாரிப்பு : திரு.ந.திருவாசகன் (ஆசிரிய ஆலோசகர்)
வழிப்படுத்தல் : திரு.சோ.திருக்குமரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)
(வலயக்கல்வி அலுவலகம் - தென்மராட்சி)

வினாத்தாள் - 1 (விடைகள்)

1. 3	11. 2	21. 3	31. 1
2. 3	12. 3	22. 2	32. 2
3. 1	13. 2	23. 2	33. 3
4. 1	14. 2	24. 2	34. 2
5. 3	15. 2	25. 3	35. 3
6. 2	16. 1	26. 1	36. 1
7. 1	17. 2	27. 2	37. 2
8. 1	18. 1	28. 1	38. 1
9. 2	19. 1	29. 3	39. 1
10. 3	20. 3	30. 3	40. 1

வினாத்தாள் - II (விடைகள்)

01	1)	நிலா/ நிலவு	01புள்ளி
	2)	விண்மீன்கள்	01புள்ளி
	3)	கமகம	01புள்ளி
	4)	நாங்கள்	01புள்ளி
	5)	வானத்தில் வெளவால் கூட்டம் பறந்து செல்கின்றது .	01புள்ளி
	6)	மலர்கள்	01புள்ளி
02	சென்றார்கள்		01புள்ளி
03	1)	பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும்.	01புள்ளி
	2)	நித்திரை கொள்ளும்போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.	01புள்ளி
04.	1)	"நான் அவனுக்கருகில் செல்லும்போது சத்தம் போடாமல் அமைதியாக இரு" எனச் சிங்கம் கட்டளை இட்டது.	01புள்ளி
	2)	சிங்கராசாவே ! என்னை அழைத்தீர்களா?	01புள்ளி
05.	1)	வாழ்வே , செல்வம்	01புள்ளி
	2)	அடம்பன் , திரண்டால்	01புள்ளி
06.	1)	விளாம்பழம்	01புள்ளி
	2)	செவ்விளநீர்	01புள்ளி
07.	1)	வால் (கோடிட்டுக் காட்ட வேண்டும்)	01புள்ளி
	2)	மணம்	01புள்ளி
08.	1)	சுயசரிதை	01புள்ளி
	2)	வேட்பாளர்	01புள்ளி
09	1)	கருத்தும்	01புள்ளி
	2)	பகலும்	01புள்ளி
10.	கன்று / போதகம்		01புள்ளி
11.	1)	தோட்டம்	01புள்ளி
	2)	அன்னாசிப்பழம்	01புள்ளி

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

புலமைப்பரிசில் பரீட்சை

நுண்ணறிவு

செவ்வாய் மற்றும் வியாழன்

காலை 5.00 மணி



zoom

Video Recording தரப்படும்

மாதக்கட்டணம் - 700/=

More Info - 76667-4945

12.	1)	Parrot	01புள்ளி
	2)	Squirrel	01புள்ளி
13.	1)	This is my mother.	01புள்ளி
	2)	She has two brothers.	01புள்ளி
14.	1)	விதுஹல்பதி	01புள்ளி
	2)	யெஹலிய	01புள்ளி
15.	1)	நூலகம்	01புள்ளி
	2)	மாமி	01புள்ளி
16.	6080		02புள்ளிகள்
17.	1)	மூவாயிரத்து ஐம்பத்தாறு	02புள்ளிகள்
	2)	50	02புள்ளிகள்
18.	1)	486	01புள்ளி
	2)	160	01புள்ளி
19.	ரூபாய் 140.00		02புள்ளிகள்
20.	3158 தேங்காய்கள்		02புள்ளிகள்
21.	54 மாணவர்கள்		02புள்ளிகள்
22.	IX		02புள்ளிகள்
23.	145cm / 1m45cm		02புள்ளிகள்
24.	3050 ml		02புள்ளிகள்
25.	ரூபாய் 150.00		02புள்ளிகள்
26.	1)	இரண்டு பகுதிகள் தீட்டப்பட்டிருக்க வேண்டும்	01புள்ளி
	2)	¾	01புள்ளி
27.	18		02புள்ளிகள்
28.	67		02புள்ளிகள்
29.	252		02புள்ளிகள்

30) 2	31) 3	32) 1	33) 2	34) 1	35) 3
36) 2	37) 2	38) 3	39) 1	40) 1	41) 3
42) 3	43) 2	44) 1	45) 2	46) 2	47) 1
48) 1	49) 2	50) 1	51) 1	52) 3	53) 1
54) 3	55) 2	56) 1	57) 3	58) 3	59) 2

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்) (முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.)

www.lkedu.lk